செ. வெ. எண்: 188

நாள்: 03/04/2009

## செய்தி வெளியீடு

கடந்த 2.4.2009 (வியாழன்) அன்று இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்கள் 6 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டு பின்னர் இலங்கை காவல் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டனர். தமிழக அரசு, இராமேஸ்வரம் மீனவர்களையும் மற்றும் அவர்களது படகுகளையும் விரைவில் விடுவிக்கும் பொருட்டு, கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதரக உயர் அதிகாரிகளையும் மற்றும் சென்னையிலுள்ள இலங்கை தூதரக உயர் அதிகாரியையும் தொடர்புகொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது. வரும் திங்கட்கிழமை (6.4.2009) அன்று இராமேஸ்வரம் மீனவர்கள் மீதுள்ள வழக்குகளை விலக்கிக் கொண்டு மீனவர்களையும் மற்றும் படகுகளையும் உடனடியாக விடுவிக்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

03/04/09

அரசு செயலர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும்
மீன்வளத் துறை.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9